பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

29 09 2025 MONDAY 6.30 PM

## தலைப்புச் செய்திகள்

1. மக்களின் சேமிப்பை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில், தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. கரூர் உயிரிழப்பு போன்ற சம்பவங்கள் நாட்டின் எந்தப் பகுதியிலும் இனி நிகழக்கூடாது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. ராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை தொடங்குவதற்காக மத்திய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம். இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>>>><<<<<<<<<

வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லி பிஜேபி அலுவலகத்தை இன்று திறந்து வைத்து அவர் பேசினார்.

சிறந்த நிர்வாகத்தை பிஜேபி தலைமையிலான கூட்டணி அரசு வழங்கி வருவதாக அவர் தெரிவித்தார். ஊழலற்ற நிர்வாகம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். மக்களின் சேமிப்பை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில், தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<<

ஆரோக்கியமான பெண்கள் - வலிமையான குடும்பம் இயக்கத்தின் கீழ், இதுவரை 9 லட்சத்திற்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதன்மூலம் 3 கோடியே 60 லட்சம் மகளிருக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இந்த எண்ணிக்கை வரும் வியாழக்கிழமைக்குள் நான்கு கோடியை தாண்டும் என்று அமைச்சர் கூறினார்.

>>>>>>>><<<<<<<<

கரூர் உயிரிழப்பு போன்ற சம்பவங்கள் நாட்டின் எந்தப் பகுதியிலும் இனி நிகழக்கூடாது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று கரூரில், மத்திய இணையமைச்சர் டாக்டர். எல். முருகனுடன் இணைந்து கூட்டாக பாதிக்கப்பட்டவர்களை சந்தித்த பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் தாங்கள் கரூர் வருகை தந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்காக தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. ஹேமமாலினி தலைமையிலான குழுவில் 7 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழு, சம்பவ இடத்தை பார்வையிட்டு உயிரிழப்புக்கான காரணங்களை விரைவில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கரூர் உயிரிழப்பு சம்பவம் குறித்து உண்மை நிலையை அறிய சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், மாநில அரசின் ஒரு நபர் விசாரணை ஆணையம், அரசின் தவறுகளை மூடி மறைக்கும் கண்துடைப்பு ஆணையமாக இருக்கும் என்பதே ஊடகங்களில் வெளியாகியுள்ள விசாரணை ஆணையத்தின் காட்சிகள் உணர்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினையில் எதிர்க்கட்சிகள் இதுவரை எந்த அரசியலும் செய்யவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இருப்பினும், இப்பிரச்சினை தொடர்பாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள காணொலி தான் பல அரசியல் சந்தேகங்களை எழுப்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

த.வெ.க நிகழ்ச்சிக்காக, காவல்துறை ஒதுக்கிய இடத்தில் உள்ள குளறுபடிகள், திமுகவின் வழக்கமான ஆம்புலன்ஸ் அரசியல், தடியடி நடந்த காட்சிகள் போன்றவை வெளிவந்து, அதைப்பற்றி மக்கள் பேசுவது வதந்தியா? என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வினவியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

ராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை தொடங்குவதற்காக மத்திய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. எ.வ. வேலு கூறியுள்ளார்.

இன்று சென்னையில் கடல்சார் வாரியக் கூட்டத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

தொழில் முனைவோருக்கான முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்வதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

>>>>>>>><<<<<<<<

திருச்சியில் இரண்டு தூய்மைப் பணியாளர்கள் உயிரிழந்த சம்பவம் குறித்து விளக்கம் அளிக்குமாறு தேசிய மனித உரிமைகள் ஆணையம், காவல்துறை மற்றும் மாநகராட்சி அதிகாரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதுதொடர்பான விரிவான அறிக்கையை இரண்டு வாரத்திற்குள் சமர்ப்பிக்குமாறு அந்த நோட்டீஸில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம் தேதி இரண்டு தூய்மைப் பணியாளர்கள் உயிரிழந்த சம்பவம் குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணையை மேற்கொண்டதன் அடிப்படையில் இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

வங்கக்கடல் பகுதியில் நாளை மறுநாள் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார். எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>>>>><<<<<<<<

மாவட்டச் செய்திகள்

தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டிணம் முத்தாரம்மன் கோவிலின் முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம், வரும் 2ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளதாக காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஆல்பர்ட் ஜான் கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<

திருச்சி மாவட்டம், தொட்டியம் அருகே கழிவுநீர் தொட்டி கட்டுமான பணிக்காக பள்ளம் தோண்டியபோது, 10 பஞ்சலோக சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.

>>>>>>>><<<<<<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான செயற்கை கால்களை ஆட்சியர் திரு. பிரசாந்த் இன்று வழங்கினார்.

>>>>>>>><<<<<<<<<

தருமபுரி மாவட்டத்தில், எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. சதிஷ் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>>>><<<<<<<<<

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், சைகை மொழி விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. தினேஷ்குமார் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>>>><<<<<<<<<

உலக இதய தினத்தை முன்னிட்டு, தென்காசியில் செவிலியர்கள் மற்றும் மாணவர்கள் மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>>>><<<<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம். இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 10 மீட்டர் பிரிவில் Ojasvi Thakur தங்கப்பதக்கத்தையும், Hrudya Shri Kondur வெள்ளிப்பதக்கத்தையும், Shambhavi Kshirsagar வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் 10 மீட்டர் பிரிவில் Himanshu தங்கப்பதக்கத்தையும், Abhinav வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் 25 மீட்டர் பிரிவில் Mukesh Nelavalli வெள்ளிப்பதக்கத்தையும், Suraj Sharma வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 6 தங்கம், 8 வெள்ளி. 6 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கிறது.

>>>>>>>><<<<<<<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 21 வயதுக்கு உட்பட்டோருக்கான மூன்றாவது மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பிரிஸ்பனில் நடைபெற்ற இப்போட்டியின் 32வது நிமிடத்தில் Kanika Siwach கோல் அடித்தார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் ஆஸ்திரேலியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

>>>>>>>><<<<<<<<<

ஆசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று வெண்கலப்பதக்கம் வென்றது.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் குழுப் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>>>>>>end<<<<<<<<<